DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதன்கிழமை 20ம் நாள் சாட்சியாகிய துரைபாபு என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துரைபாபு | வயது | 56 |
| த/பெ. | மோகனரங்கபிள்ளை | இனம் | ஆண் |
| கிராமம் | ஆற்காடு | தொழில் | உதவி பொறியாளர் |
| சமயம் | | தாலூக்கா | |

**S.T.C. 72/2024**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை 20.11.2024 அ.சா.1</u>**

1. நான் ஆற்காடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணியாற்றி வருகிறேன். 2021ம் வருடம் அரக்கோணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணியாற்றி வந்தேன். 2021 சட்டமன்ற தேர்தலில் பறக்கும் படை 1வது பிரிவில் நான் தேர்தல் அலுவலராக பணியாற்றி வந்தேன்.

2. 01.04.2021ம் தேதி மாலை 04.00 மணிக்கு அரக்கோணம் தேர்தல் கட்டுப்பட்டு அறையில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. அரக்கோணம் அம்பேத்கர் நகரில் பணம் பட்டுவடா நடப்பதாக தகவல் வந்தது. நானும், இரண்டு காவலர்களும் அரக்கோணம் அம்பேத்கர் நகருக்கு சென்றோம்.எங்களுடன் வீடியோ பதிவு செய்யும் நபரும் வந்தார்.

3. அங்கு ஒரு வீட்டிற்கு அருகே கும்பலாக இருந்தார்கள். பிரவீன்குமார் என்பவரிடம் ரூபாய்.18,000/- பணம் இருந்தது. பிரவீன்குமாரின் சட்டை பாக்கெட்டை சோதனை செய்தபோது ரூபாய்.18,000/- பணம் இருந்தது. அந்த பணத்தை கைப்பற்றி அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

4. போலீசார் என்னிடம் புகார் எழுதி வாங்கிகொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது நான் கொடுத்த புகார். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பணம் கொடுப்பதாக

தகவல் வந்து சென்று சோதனை செய்தபோது பணம் கிடைத்தாக புகார் கொடுத்தேன். 4 வருடம் ஆகிவிட்டதால் பிரவீன்குமாரின் அடையாளம் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5. நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். தேர்தல் நேரத்தில் எனது பணி என்னவென்றால் வாகனங்களை சோதனை செய்து, புகார் வந்தால் அங்கு சென்று சோதனை செய்வது. யார் எனக்கு சம்பவம் தொடர்பாக தகவல் கொடுத்தார்கள் என்றால் கட்டுப்பாட்டு அறையில் இருந்து வந்தது.

6. எத்தனை மணிக்கு எனக்கு தகவல் வந்தது என்றால் மாலை 03.45 மணி. புகாரில் எதிரியின் பெயர் இடைசெறுகளாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் புகாரை எழுதியபோது பெயரை கேட்டதால் எழுதிக்கொடுத்தேன்.

7. புகாரில் பிரவீன்குமார் வீட்டிற்குள் சென்று மறைந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் பெயரை எனக்கு எப்படி தெரியும் என்றால் எதிரி தான் சொன்னார். எதிரி தான் பெயரை தெரிவித்ததாக புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

8. என்னுடன் தேர்தல் ரோந்து பணியில் இருந்த நபர்களின் பெயர் தெரியுமா என்றால் 4 வருடம் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. பிரவீன் குமாரை சோதனை செய்தபோது ரூபாய்.18,000/– வைத்திருந்ததாக கண்டுப்பிடிக்கப்பட்டதாக புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. தேர்தல் சமயத்தில் தனிநபர் ரூபாய்.50,000/–வரை ஆவணம் இல்லாமல் வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்றால் மாலை 04.00 மணி இருக்கும்.

10. யார் முன்னிலையில் பணத்தை கைப்பற்றினேன் என்றால் இரண்டு காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் எதிரி, வாக்களார்களுக்கு பணம் கொடுக்க முற்பட்டதாக தெரிவிக்கவிக்கவில்லை என்றால் சரிதான். யார் வீட்டின் அருகே எதிரி இருந்தார் என்று குறிப்பிட்டு புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

11. பொய்யான வழக்கு என்பதால் முகவரியை குறிப்பிடவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.